Embassy of the United States of America

Colombo

PRESS RELEASE

Public Affairs Section

Tel: +94 (1) 249-8100 Fax: +94 (1) 244-9070

Email: vanhornnt@state.gov ● http://lk.usembassy.gov

Release no. 10172017T

அமெரிக்காவின் 2019 பல்வகைமை விசா லொத்தர் மீள ஆரம்பமாகியுள்ளது

கொழும்பு, ஒக்டோபர் 17: தொழில்நுட்ப இடர்பாடுகளால் 2019 ஆம் ஆண்டிற்கான பல்வகைப்பட்ட வீசா நிகழ்ச்சி (அதாவது DV-2019 நிகழ்ச்சி) விண்ணப்ப காலம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2017, அக்டோபர் 18ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்ட அத்தனை விண்ணப்பபடிவங்களும் மீள சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்நிகழ்ச்சிக்கு தகுதி பெறா நாட்டில் பிறந்த ஒருவர் சில சூழ்நிலைகளில் இந்நிகழ்ச்சிக்கு தகுதி பெற வாய்ப்புண்டு. சில தொழில்நுட்ப இடர்பாடுகளின் காரணங்களால் இவ்விடயம் சரியான முறையில் கையாளப்படவில்லை. எனவே மீளவும் கணனி பதிவுகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. எவ்வித வெளிப்புற குறுக்கீடுகளினாலோ அல்லது எவ்வித இணைய ஊடுருவ முயற்சிகளினாலோ இது மீள ஆரம்பிக்கப்படவில்லை.

கிறீன் கார்ட் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சிரமத்திற்கு நாம் வருந்துகிறோம். விண்னப்பப் படிவங்கள் நேர்மையான முறையில் கையாளப்படுவதற்கு, DV-2019 நிகழ்ச்சி மீள ஆரம்பிக்கப்படுவதே சரியான முறையாகும். DV-2019 அக்டோபர் 18, 2019, புதன்கிழமை இரவு 9:30 மணி முதல் 22, நவம்பர் 22, 2017 புதன்கிழமை இரவு 10:30 மணி வரை விண்னப்பப்படிவங்கள் ஏற்று கொள்ளப்படும்.

புதன் கிழமை, அக்டோபர் 18, 2017ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பபடிவங்களும் பரிசீலிக்கப்படாது, புதிய பதிவு காலத்தில் மற்றொரு நுழைவு படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட நுழைவு படிவங்கள் நிராகரிக்கபடும். எனவே விண்ணப்பதாரிகள் ஒரே ஒரு புதிய நுழைவு படிவத்தை நிரப்ப வேண்டும். புதிய பதிவு காலத்தின் போது ஒன்றுக்கு மேற்பட்ட இடுகைகளை சமர்ப்பிக்கும் நபர்களின் நுழைவு படிவங்கள் நிராகரிக்கபடும்.

விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யும் காலத்தின் போது https://www.dvlottery.state.gov/ மூலமாக DV நுழைவு படிவங்களை பதிவு செய்யலாம். இந்நிகழ்ச்சி பற்றிய அறிவுறுத்தல்களை ஐக்கிய அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் இணையதளத்தில் பெற்று கொள்ளலாம். usvisas.state.gov/dv/instructions. ஏனைய அனைத்து தகுதி தேவைகளில் எவ்வித மாற்றங்கள் இல்லை.

மே 15, 2018 தொடங்கி, DV-2019 விண்ணப்பதாரிகள் தங்கள் நுழைவு படிவம் தேர்வு செய்யப்பட்டுள்ளதா என்பதைப்பார்க்க, கிறீன் கார்ட் வீசா நிகழ்ச்சிக்கான உத்தியோகப்பூர்வ இணையத்தளமான dvlottery.state.gov மூலமாக தமது நுழைவு படிவத்திற்கான பிரத்தியேக இலக்கத்தை பதிவு செய்து பார்த்து கொள்ளலாம். தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள் எவ்வாறு தமக்கும், தமது தகுதியான குடும்ப அங்கத்தினர்களுக்கும் வீசாவிற்கு விண்ணப்பிப்பது என்ற விபரங்களையும், நேர்முக தேர்வு நியமன நேரங்களையும் இதே இணையதளத்தில் பெற்று கொள்ளலாம்.

###